ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 24.11.2015 |

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 நவெம்பர்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2015 செத்தெம்பரின் 0.3 சதவீதம் கொண்ட எதிர்க்கணியத்திலிருந்து 2015 ஒத்தோபரில் 1.7 சதவீதத்திற்கு அதிகரித்து 2014இன் பிற்பகுதியில் இடம்பெற்ற நிருவகிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட கீழ் நோக்கிய திருத்தங்களின் தாக்கம் படிப்படியாக மறைந்து போனமையினைப் பிரதிபலித்தது. ஆண்டுச் சராசரி அடிப்படையில், 2015 ஒத்தோபரில் முதன்மைப் பணவீக்கம் 0.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், பொருளாதாரத்தில் கூட்டுக் கேள்வி நிலைமைகள் உறுதியடைந்து வருகின்ற தன்மையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், மையப் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2014 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த எட்டு மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஒத்தோபரில் 4.4 சதவீதத்தினை அடைந்தது. அதேநேரம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் விலை அசைவுகளை உள்ளடக்குகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (2013=100) 2015 நவெம்பர் 23இல் வெளியிட்டிருக்கிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள், கொழும்பு மாவட்டத்தின் நகர்ப்புறங்களை மட்டும் உள்ளடக்கிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அசைவுகளுடன் பெருமளவிற்கு இசைந்து செல்வதாகக் காணப்படுகிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தின்படி 2015 ஒத்தோபருக்கான முதன்மைப் பணவீக்கம் 3.0 சதவீதமாகக் காணப்பட்டது.

நாணயத் துறையில், வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி முன்னைய மாதத்தின் 21.3 சதவீதத்திலிருந்து 2015 செத்தெம்பரில் 22.2 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் காலாண்டு அளவீடுகளின்படி, பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகள் கொடுகடனில் பெரும்பங்கினைப் பெற்றுக் கொண்டமை எடுத்துக் காட்டப்பட்டதுடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 40.6 சதவீதம் மற்றும் 24.5 சதவீதத்தைக் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. 2015 செத்தெம்பரில்

விரிந்த பணம் (M2b) முன்னைய ஆண்டின் 16.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 16.0 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டமைக்கு வங்கித்தொழில் முறைமையினால் தனியார் மற்றும் அரச துறை இரண்டிற்கும் வழங்கப்பட்ட கொடுகடன் விரிவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது.

வெளிநாட்டுத் துறையினைப் பொறுத்த வரையில், 2015 செத்தெம்பரில் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க பெரிதாகயிருந்தமையால் வர்த்தக கணக்கின் பற்றாக்குறை ஐ.அ. டொலர் 733 மில்லியனுக்கு 4.1 சதவீதத்தினால் குறுக்கமடைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 6145 மில்லியனுக்கு 3.8 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு எண்ணெய்யல்லா இறக்குமதிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பே தூண்டுதலாக அமைந்தது. மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட அண்மைக்கால கொள்கை வழிமுறைகள் 2016 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து குறிப்பிட்ட இறக்குமதிகளை, குறிப்பாக உந்து ஊர்திகளின் இறக்குமதியினை கட்டுப்படுத்துமென்பதனால் வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தம் தளர்வடையும். அதேவேளை 2015இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருமானங்கள் 17.9 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றமையானது வெளிநாட்டு நடைமுறைக் கணக்கினை வலுப்படுத்துகின்ற வேளையில் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்கள் 1.8 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. 2015 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஐ.அ. டொலர் 1.5 பில்லியன் கொண்ட ஒன்பதாவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிருந்தான பெறுகைகளின் காரணமாக 2015 நவெம்பர் 03 அளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுக்கு வலுவடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, இலங்கை ரூபா 2015இன் இது வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 8.1 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

பொருளாதாரத்தில் இடம்பெற்ற மேற்குறிப்பிட்ட அபிவித்திகளைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை 2015 நவெம்பர் 24ஆம் நாள் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்துக்களைக் கொண்டிருந்தது. இதன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் மாற்றமின்றி முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |